Registered as a News-Paper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 09 | 22 - 04 - 2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 63

மங்கையர் மனங்கவரும் நவீன நகை உலகில் தங்க நகைகளுக்கு தனித்துவம் பெற்ற நிறுவனம்

கணேசா நகையகம்

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா.

# சிறிலங்காவுடனான பேச்சுவார்த்தைகள் விடுதலைப்புலிகளினால் இடைநிறுத்தம்!

## ரணிலுக்கு அன்ரன் பாலசிங்கம் கடிதம்

**தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலும், யூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் கலந்துகொள்வதில்லை என விடுதலைப்புலிகள் தீர்மானித்துள்ளனர். இவ் இடை நிறுத்தத்திற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது காணப்பட்ட முக்கிய முடிவுகள் அமுல் செய்யப்படாமையே காரணம் எனப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வு நடைமுறைகள் செயற்படுத்தப்படாமைக்கு ஆழமான அதிருப்தியை வெளிப்படுத்தும் முகமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, தமது பிரதிநிதிகள் குழுவை பேச்சுக்களில் கலந்துகொள்வதில் இருந்து இடைநிறுத்தி புறக்கணிக்கப்போவதாக சிறிலங்கா அரசுக்கு அறிவித்துள்ளது.

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தலைமை தாங்கும் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களினால் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் இந்த முடிவானது போர்நிறுத்த உடன்படிக்கை நியமங்களின்படி இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதில் இழுத்தடிப்பில்லாத அமுலாக்கத்தை நிறைவேற்றாததன் மூலம் சமாதானத்தின் மீதுள்ள நம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பாதுகாப்பு நிலவரம் பிரதமர் தலைமையில் மாநாடு!

(கொழும்பு)

கிழக்குப் பிராந்திய பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து ஆராயும் மாநாடு சிறிலங்காப் பிரதமரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் கிழக்குப் பகுதிகளில் வன்செயல்களைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மூதூர் செல்வநகர் பகுதியில் இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொலை!

மூதூர் செல்வநகர் கம்பன் குளத்தில் நீராடிக்கொண்டிருந்த இரண்டு முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குளத்தில் நீராடிக்கொண்டிருந்த இவ்விருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு மறைந்துள்ளனர். சுட்டுக்கொல்லப்பட்டுள்ளவர்கள் அந்நகரை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்று கூறப்படுகிறது.

## அன்ரன் பாலசிங்கத்தை பீரிஸ் சந்திக்கத்திட்டம்!

முன்னைய சுற்றுப் பேச்சுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சில பிரேரணைகள் அமுல் செய்யப்படாமை பற்றி அரசாங்கம் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக சிறிலங்கா அரசாங்கத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், லண்டனிலுள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து நேற்று மா

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிங்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறின் அரசிலிருந்து விலகப்போவதாக அமைச்சர் ஹக்கீம் எச்சரிக்கை

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு உத்தர வாதம் வழங்க பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தவறினால் தாம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களிற்கு தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர் அரசாங்கம் முஸ்லிங்களின் உரிமைகள் குறித்து அக்கறை செலுத்தவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஸ்ரப் தனது ஆதரவை ஹக்கீமுக்கு வழங்குவதாகவும் கிழக்கு முஸ்லிம்கள் விடயத்தில் ஹக்கீமின் நிலைப்பாட்டை தாம் முழுமையாக ஆதரிப்பதாகவும் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

## லண்டனில் நோர்வே தரப்பை மிலிந்த, பீரிஸ் சந்திப்பர்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று பிரிட்டனில் இடம்பெறவிருக்கின்றது.

ஏற்கனவே, பிரிட்டன் சென்றுள்ள அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் நோர்வேயின் பிரதிநிதிகளை லண்டனில் சந்தித்து இந்தக் கலந்துரையாடலை நடத்தவுள்ளனர்.

இப்பேச்சுக்களை தாய்லாந்தில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் உயிரிழப்பு

கடந்த இருபது ஆண்டுகளாக ஜேர்மனியில் வாழ்ந்துவிட்டு தனது சொந்த ஊரான வடமராட்சிக்குச் செல்லும் நோக்குடன் வந்த ஒருவர் முகமாலையில் உள்ள சிறிலங்கா படையினரின் சோதனைச் சாவடியில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி பருத்தித்துறை பன்னக்கட்டையைச் சேர்ந்த நடராசா திருக்கேதீஸ்வரன் (வயது - 43) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது உயிரிழப்பு எவ்வாறு

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைச் சந்திக்க ஹக்கீம் விருப்பமாம்!

### சம்பூருக்கு வருமாறு புலிகள் அழைப்பு

(கொழும்பு)

மூதூரில் சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினூடாக கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சம்பூர் பிரதேசத்திற்கு வருமாறு கேட்டுள்ள போதும் பாதுகாப்புக்காரணங்களுக்காக பேச்சுவார்த்தையைத் திருகோணமலையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுள்ளதாகவும் இதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளதாக ரூபவாகினி கூறியுள்ளது.

## 12 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கத் திட்டம்

மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் புலமைப் பரிசில் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 12 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த கஷ்டப் பிரதேச

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைக்கு சிறிலங்கா அரசு பதில் அனுப்பி வைப்பு!

(கொழும்பு)

கடற்புலிகளை கடற்படையாக அங்கீகரிப்பது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு சிறிலங்கா அரசு தனது பதிலை அனுப்பிவைத்துள்ளது.

கடற்புலிகளை கடற்படையாக அங்கீகரிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் வளர்க்க முடியும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

இந்தப் பரிந்துரை தொடர்பாக சிங்கள ஊடகங்கள் காரசாரமான எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டுவந்தன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையை ஏற்கப்போவதில்லை என்று கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அனுப்பிய பரிந்துரைகள் தொடர்பான தமது பதிலை சிறிலங்கா அரசு அனுப்பி வைத்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## - பணியாளர் வேலை நிறுத்தம் - வவுனியா மருத்துவமனையில் வெளிநோயாளர் பகுதி செயலிழப்பு!

(வவுனியா)

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினர் வவுனியா பொது மருத்துவமனை தொடர்பில் எடுத்து வரும் நடவடிக்கையினால் வவுனியா பொது மருத்துவமனைப் பணியாளர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதனால் நேற்று வவுனியா பொது மருத்துவமனையில் வெளி நோயாளர் பிரிவு செயலிழந்தது.

உலக சுகாதார நிறுவனம் வழங்கிய நோயாளி காவு வண்டியை வழங்காமை, பொதுமருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்ட இந்த மருத்துவமனையை அபிவிருத்தி செய்ய தேவையானவற்றை வழங்காமை என்பவற்றை கண்டித்தும் குறைபாடுகளை சுட்டிக்காட்டிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

முத்துக்குமார் விஸ்வலிங்கம் என்பவருடைய குடும்ப அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய புத்தகப்பை கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகாமையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.
(3098)

### அறிவுடைமை கல்வி நிலையம்

கச்சேரியடி கிளிநொச்சி

2004,2005க்கான கணித விஞ்ஞான கலை வர்த்தக வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன. இ.புவி. நிர்வாகி. (3099)

### கூட்டம்

கிளி. மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் இன்று கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராச நாயகம் தலைமை யில் கிளி அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கு அத்தியா வசிய சேவைகள் குழுக் கூட்டமும் பி.ப 2.00 மணிக்கு மாவட்ட விவசா யக் குழுக் கூட்டமும் நடைபெற வுள்ளதென கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

### வானியல் பாசறை திகதி மாற்றம்

கிளிநொச்சி வலயத்தில் உள்ள கனகபுரம் ம.வியில் 24.04.2003 நடை பெறவிருந்த வானியல் பாசறை (ஓரை வட்டத்தை இனங்காணல்) 26.04.2003 அன்று நடைபெறும் என் பதை விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும், பங்கு கொள்ள ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறியத்தருகின்றார்.

## ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் ஒன்றிய அங்கத்தவர்கள் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வடமாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் ஒன்றிய அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் கல்விக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விசேட கலந்துரையாடலில் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மடு, மன்னார் வலயங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வடமாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் ஒன்றியச் செயலர் வேண்டியுள்ளார். (சோ)

## அம்பலவன் பொக்கணை ம.வி சாதாரண தரப்பரீட்சை முடிவு

(முல்லைத்தீவு)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையின் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயத்தின் பெறுபேறுகள் வருமாறு:

வாரித்தம்பி சிவகுமார் 8ஏ, எஸ்., கிருஸ்ணலிங்கம் கிருபாகரன் 7ஏ, 2சி, கனகரத்தினம் சுரேகா 6ஏ, 2பி, சி, தவராசா நிமல்ராஜ் 5ஏ, 4பி, பஞ்சநாதன் ரேவதி 5ஏ, 3பி, சி, எஸ், மரியதாஸ் கொன்செப்ரா 4ஏ, 3பி, சி, 2எஸ், தவராசா சுபேஸ் 4ஏ, 3பி, சி, எஸ், ப.துதிஸ்குமார், 3ஏ, 4பி, 2சி, பரமதாஸ் நதியா 3ஏ, 2பி, 3சி, எஸ், குணசீலன் ஞானசீலன் 3ஏ, பி, 5சி, ரகுபதி உஷாந்தினி, 2ஏ, 4பி, 3சி, மரியதாஸ் சுமன் 2ஏ, 3பி, 4சி, தம்புத்துரை சன்ஜிகா 2ஏ, பி, 4சி, 2எஸ். கணேசன் ஸ்ரீதர்சினி 2ஏ, 3சி, 3எஸ்.

## குடும்பத்தகராறு காரணமாக மனைவி தற்கொலை கணவன் நஞ்சருந்தினார்

(வட்டக்கச்சி)

கட்டைக்காட்டுப் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக மனைவி தற்கொலை செய்துள்ளார் கணவன் நஞ்சருந்தியதால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் கட்டைக்காடு கிழக்கைச் சேர்ந்த கனகராசா ரஞ்சிதமலர் (வயது - 38) என்பவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். அதே தினம் இவரது கணவர் நஞ்சருந்திய நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (12)

## திருகோணமலை நகரசபையை மாநகர சபையாக மாற்றுக

### ரெலோ மாநாட்டில் கோரிக்கை

திருகோணமலை நகர சபையை மாநகர சபையாகத் தரமுயர்த்துமாறு ரெலோவின் செயலாளர் நாயகம் இந்திரகுமார் பிரசன்னா கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மன்னாரில் இடம் பெற்ற ரெலோ அமைப்பின் ஆறாவது தேசிய மாநாட்டிலேயே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னர் பட்டின சபையாக இயங்கிய ஊர்காவற்றுறை, சுன்னாகம், சங்கானை, நெல்லியடி ஆகியவை பிரதேச சபைகளாக மாற்றப்பட்டுள்ளதை ரெலோ அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## இந்தியாவுடன் வர்த்தக உறவை மேம்படுத்த உயர் மட்டக்குழு விஜயம்

இந்தியாவோடு வர்த்தக உறவை மேம்படுத்தும் நோக்கத்தோடு சிறிலங்காவின் உயர் மட்டக் குழுவொன்று அந்த நாட்டுக்கு விஜயம் செய்துள்ளது.

சிறிலங்காவின் கைத்தொழில் அமைச்சர் தலைமையிலான குழுவே இந்தியா சென்றுள்ளது.இந்தக்குழு அங்கு ஆறு நாட்கள் தங்கி இருந்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளது.

இந்திய நிதியமைச்சர் ஜஸ்வந் சிங், தகவல் தொழில் நுட்பத்துறையின் பிரபல தொழிலதிபர் நாராயணமூர்த்தி உட்பட பல முக்கிய பிரமுகர்களை இக்குழுவினர் சந்திக்க உள்ளனர்.

சிறிலங்காவின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவியை இக்குழு கோரவுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர வர்த்தக உறவு குறித்தும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும் இந்த விஜயத்தின் போது விவாதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீதிகளில் செல்லும் பாதசாரிகள் வலது புறத்தினைப் பயன்படுத்துக

### காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவு கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகள் பயணிக்கும் போது வீதிகளின் வலது பக்கத்தினைப் பயன்படுத்தும் வண்ணம் தமிழீழக் காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

அத்துடன் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் வீதிகளில் சமாந்தரமாகச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளதுடன் மீறுபவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவரென காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துவரும் போக்குவரத்து ஒழுங்குகளைப் பின்பற்றுவதன் மூலம் வீதி விபத்துக்களில் இருந்து தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.(சோ)

# மூதூரில் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் அமைக்க முயற்சி

(திருமலை)

மூதூரில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் நிரந்தர படை முகாம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூதூரில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் அசம்பாவித சம்பவங்களை அடுத்தே இந்தப் படைமுகாம் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட படையினர் புதிய படைமுகாம் அமைக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இந்தப் படைமுகாம் அமைக்கப்பட்டால் அந்தப் பகுதியில் உள்ள தமிழ் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்று பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் பொது மக்களின் இயல்பான போக்குவரத்துக்கும் படைமுகாம் தடையாக அமையக்கூடும் என்றும் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை உள்நோக்கத்துடனேயே இந்தப் புதிய படைமுகாம் அமைக்கப்படுவதாகவும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் இயல்பான போக்குவரத்தை தடை செய்யும் நோக்குடனேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கிளி. மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரியை

# தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழிற்பயிற்சி நெறியினை, தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ்க் கொண்டு வருதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தொழிற் நுட்பக் கல்லூரிக்கு வருகைதந்திருந்த தொழில் பயிற்சி அதிகார சபைப் பணிப்பாளர் சங்கரன் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்,

கிளி. மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரியினை தொழிற்பயிற்சி அதிகாரசபை பொறுப்பேற்பதற்கான முழு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக வருகைதந்துள்ளதாகவும், மேற்படி கல்லூரியின் ஆளணி மற்றும் உபகரணங்கள் யாவும் கையேற்கப்படவுள்ளதெனவும், கிளி. பிராந்திய தொழில் நுட்பக் கல்லூரியின் தலைமைக்காரியாலயம் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளதெனவும், முன்னோடியாக தற்போது நடைபெற்றுவரும் தொழிற்பயிற்சி நெறியினை அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார். (சோ)

# எமக்கு இதுவரை வழங்கப்பட்ட வாக்குறுதி எதுவும் நிறைவேற்றப்படவில்லை

### களுத்துறைத் தமிழ்ச் சிறைக்கைதிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி எதுவும் நிறைவேற்றப் படவில்லை என களுத்துறை சிறைக்கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தம்மைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியிடம் இவ்வாறு விசனம் வெளியிட்டுள்ளனர்.

இக்கைதிகளில் ஐந்து பேருடைய வழக்குகளை சொந்த இடத்துக்கு மாற்றவும் மேலும் ஐந்து பேரை விடுதலை செய்யவும் தமக்கு வாக்குறுதி வழங்கப்பட்டதாகவும் ஆனால் இவ்வாக்குறுதி வழங்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டநிலையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர்.

## நிர்வாகிகள் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் வைரவர் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. நியாப் திட்ட அறிமுக உரையுடன் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக கா. ஆறுமுகம், செயலாளராக கி. ஆழ்வாப்பிள்ளை, பொருளாளராக சி. பாலசிங்கம் ஆகியோர் தெரிவாகினர். எட்டு நிர்வாகக் குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். கிராம அலுவலர், வலயப் பொறுப்பாளர் ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தினர். (12)


## நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலையின் மாணவர் போக்குவரவுச் சேவை (வண்டில்) அமைப்பதற்கு நிதியுதவி புரிந்த கரித்தாஸ் சிறிலங்கா (செடெக்) நிறுவனம், செயற்பாட்டு நிறுவனம் கியூடெக். கரித்தாஸ் கிளிநொச்சி ஆகியவற்றுக்கும் முக்கிய பாகங்களை வழங்கிய தமிழர் புனர் வாழ்வுக் கழகம் புதுக்குடியிருப்பு. வனவளத்துறை கனகராயன்குளம். வாகனப் பிரிவு துணுக்காய் ஆகியவற்றின் உதவிகளுக்கு பாடசாலைச் சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்.**

(3151)

# நேபாள அரசு - கிளர்ச்சிவாதிகளிடையே நடைபெறவிருந்த பேச்சுக்கள் ஒத்திவைப்பு!

## - கருத்தொருமையின்மையால் ஏற்பட்ட விளைவு

(காட்மண்டு)

**நேபாள அரசிற்கும் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஒத்திப்போடப்பட்டுள்ளன. அரசுக்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் பேச்சுக்களை நடத்துவதில் காணப்பட்ட முரண்பட்ட கருத்துக்களுக்கும் மற்றும் கட்சிகளின் ஆதரவின்மையே இதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது.**

மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தும் அறிமுகக் கூட்டமாக இதனை அரசு நடத்த விரும்பியது. எனினும் இதற்கு மாவோயிஸ்டுக்கள் இணங்க மறுத்ததைத் தொடர்ந்தே பேச்சு வார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கிளர்ச்சி வாதிகளின் பேச்சாளரான கிருஸ்ணபகதூர் மஹ்ரா கருத்து வெளியிடுகையில், இரு தரப்பினரும் உத்தியோக பூர்வ மற்ற வகையில் கலந்துரையாடிய பின்னர் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான அடுத்த திகதி அறிவிக்கப்படும் என்று கூறினார். அத்தோடு அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இக்கூட்டத்திற்கான புதிய திகதி 'வெகுவிரைவில் தீர்மானிக்கப்படும் என்றுநேபாள திட்ட அமைச்சர் நாராயணசிங் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க பேச்சுக்கள் குறித்து நேபாள அரசியல் கட்சிகளிடையேயும் கருத்தொருமை ஏற்படவில்லை. பிரதமர் லோகேந்திர பகதூர் செந்தின் தலைமையின் கீழான உயர்மட்டப் பேச்சுவார்த்தை வழிகாட்டும் குழுவிற்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முக்கிய அரசியல் கட்சிகள் மறுத்துள்ளன. 'பேச்சுவார்த்தைக் குழுவில் பங்கேற்கப் போவதில்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

முன்னதாக துணைப்பிரதமர் பத்ரிப் பிரசாத் மண்டல் தலைமையின் கீழ் ஆறு உறுப்பினர்கள்கொண்ட அமைச்சர்கள் மட்டப் பேச்சு வார்த்தைக் குழுவை நேபாள அரசு அமைத்திருந்தது குறிப்பிடத் தக்கது.

## சதாமின் மருமகன் கைது!

சதாம் ஹுசைனின் மருமகனும், ஈராக்கின் முன்னாள் அறிவியல் துறை அமைச்சருமான அப்துல் காலிக் அப்தர் கபாத் அமெரிக்கப் படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கப் படையினரால் தேடப்பட்டுவரும் சதாம் ஹுசைன் ஆதரவாளர்களின் பட்டியலில் இவரது பெயரும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.



காஸாவில் ரபா அகதிமுகாமில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீன சிறுவனொருவனைத் தூக்கிச் செல்கின்றனர்.



பலஸ்தீனத்தின் காஸாவில் முற்றாகச் சேதமடைந்த கட்டடத் தொகுதியொன்றைப் படத்தில் காண்க

# எகிப்து சிரிய நாடுகளின் சனாதிபதிகள் சமகால விவகாரங்கள் குறித்து ஆராய்வு

(டமாஸ்கஸ்)

ஈராக் யுத்தத்தின் பின் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிரியாவிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக எகிப்திய சனாதிபதி கொஸ்னி முபாரக் சிரிய சனாதிபதி பசார்-அல்-அசாத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சிரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள பதற்ற நிலையைத் தடுப்பதற்கு எகிப்து அமெரிக்காவுடனான அதன் செல்வாக்கைப்பயன்படுத்தும் என்றுசிரியா எதிர்பார்க் கின்றது.

இதற்கு முன்னர் சிரிய சனாதிபதியுடன் டமஸ்கஸ்சில் இரண்டு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ரடல் இஸ்சா அமெரிக்காவுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்த சிரியா விரும்புகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

## முறியடிப்பு

ஈராக்கின் மத்திய வங்கியிலிருந்து லட்சக் கணக்கான டொலர்களை திருட முயன்றதை பஸ்ராவிலுள்ள பிரிட்டிஷ் படைகள் முறியடித்துள்ளன.

பகல் வேளையில் 69 பேர் வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்தைக் குண்டு வைத்துத் தகர்த்துப் பணத்தை கொள்ளையடிக்க முயற்சி செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.-

## படகு விபத்து

பிரேசில் நாட்டில் படகொன்று கவிழ்ந்ததில் 12 பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். ஐந்து பேரைக் காணவில்லை.

உல்லாசப் பயணிகள் 64 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற வள்ளமே இவ்வாறு கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடல் கொந்தளிப்பும், பலத்த காற்றுமே இந்த விபத்துக்குக் காரணம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# பிரிட்டன் உளவுத் துறை அரசை தவறாக வழி நடத்தியது!

## - ரொனிபிளேயர் நிராகரிப்பு

ஈராக்கில் உள்ள பாரிய அழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் பிரச்சினையில் பிரித்தானியாவின் உளவுத்துறையானது பாதுகாப்பு அமைச்சரைத் தவறாக வழிநடத்தியிருப்பதாக பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதுவரையில் ஈராக்கில் பாரிய அழிவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படாத நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையைப் பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயரின் அலுவலகம் நிராகரித்துள்ளது.





பாக்தாத்தில் அமெரிக்கப் படையினர் தமது நிலையை உறுதி செய்கின்றனர்.

# பொடோ சட்ட விடயத்தில் தி.மு.க. இரட்டை வேடம்

## -சுப்பிரமணிய சுவாமி சாடல்

(சென்னை)

பொடோ சட்ட விடயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை வேடம் போடுவதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

பொடோ சட்டத்தை எதிர்த்து வரும் தி.மு.க வாஜ்பாய் அரசிலிருந்து அதன் அமைச்சர்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில்' கூறியுள்ளார்.

பொடோ சட்டத்தை தமிழக முதலமைச்சர் தவறுதலாகப் பயன்படுத்துவதாக, அரசியலமைப்புக் கூட்டத்தில் 356 வது பிரிவைப் பயன்படுத்தி அவரது அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று அரசியல் கட்சிகள் கோருவது தவறானது என்றும் அவர் கூறியுள்ளார்.

# மண் சரிவில் சிக்குண்டு 34 பேர் பரிதாப மரணம்!

மத்திய ஆசிய குடியரசான கிறிசிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண் சரிவில் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மண் சரிவினால் 15 வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளன என்று அவசரகால அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மண் சரிவு காரணமாக மின்சாரம் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சீனாவில் 'சார்ஸ்' தகவல்களை மறைத்த சுகாதார அமைச்சர் பதவி நீக்கம்!

## -பல உயரதிகாரிகள் மீதும் நடவடிக்கை

சார்ஸ் நோய் பரவுவது குறித்து தகவல்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் சீனாவின் சுகாதார அமைச்சர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்நோய் பரவுவதை தடுக்கத் தவறியதாக பல உயர் அதிகாரிகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மேதினத்தை முன்னிட்டு வழங்கப்படும் ஒருவார விடுமுறையைச் சீன அரசு ரத்துச் செய்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் சீனாவில் வழங்கப்படும் இந்த விடுமுறையில் மாணவர்கள் தங்கள் இல்லங்களுக்கும், தொழிலாளர்கள் தங்கள் கிராமங்களுக்கும், மத்தியதர வர்க்கத்தினர் சுற்றுலாவுக்கும் செல்வார்கள். ஆனால் சார்ஸ் நோய் பரவுவதை அடுத்து இவ்வருட விடுமுறையை ரத்துச் செய்வதாக அந்நாட்டின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



பலஸ்தீனில் கைவிடப்பட்ட சாலைப் பொன்றில் இருந்து சீனி மூடைகளைக் களவாடும் ஈராக்கிய சிறுவன்

# போர்நிறுத்த உடன்படிக்கைக் கோட்பாட்டின் படி கடற்புலிகளை கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும்

## -கடல்பகுதியில் மோதலை தவிர்ப்பதற்கான சிபார்சில் ரெலெவ்சன் வலியுறுத்து

சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை ஒரு உண்மையான கடற்படைப் பிரிவாக் அங்கீகரிக்க வேண்டும் என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரிலெவ்சன் தெரிவித்துள்ளார்.

கடலில் போர்நிறுத்தம் பற்றி இவர் முன்வைத்திருந்த சிப்ாரிசிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கைநடைமுறைகளையும் சர்வதேச சட்டங்களையும் ஏற்று நடத்தல் அதாவது இருதரப்புக் கடற்படையினரும் எந்த மட்டங்களைச் சேர்ந்தவர்களானாலும் சரி போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளையும் சர்வதேச சட்டங்களையும் எந்தவொரு நிலைகளின் போதும் அனைவரும் தவறாது ஏற்று நடக்க வேண்டும்.

கடலில் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான கொள்கை பற்றியும் அந்த சிபாரிசில் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடலில் போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளை அமுல்படுத்துவது குறித்த பொதுவான கற்கை இருதரப்பு உயர் மட்டங்களினால் மட்டுமே தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்தோடு கடல்சார் விவகாரங்களுக்கான குழுக்கள் உடனுக்குடன் விபரங்களை முன்வைக்க வேண்டும்.

கடலில் வன்முறைச் சம்பவங்களை தடுப்பதற்கான வழியாக இரண்டு கடல்சார் குழுக்கள் நிறுவப்பட வேண்டும். அவற்றில் ஒன்று திருகோணமலையிலும் மற்றையது யாழ்ப்பாணத்திலும் இயங்க வேண்டும். இக்கடல் சார் குழுக்களானது இருதரப்புக் கடற்படைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளை கொண்டதாக விளங்க வேண்டும் அதே வேளை கடல்சார் குழுக்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்கண்காணிப்புக் குழுவினரால் நெறிப்படுத்தப்பட வேண்டும் அத்தோடு இக்கடல் சார் குழுக்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதில் இருந்து இருதரப்பிற்கும் இடையிலான எண்ணிலடங்காத கடல்சார் பிணக்குச் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன. எனவே இதனால் போர்நிறுத்த நடைமுறைகளுக்கும் சமாதான நடைமுறைகளுக்கும் அபாயகரமான நிலைமைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

போர்நிறுத்த உடன்படிக்கை கடலில் மீறப்படுவது தொடர்பாக் மிக மோசமான சம்பவங்களில் சிலவற்றை வெளிப்படுத்த விளையும் மிகைப்படுத்தலாக இக்கூற்று அமையவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையிலான ஆளணி மற்றும் சட்டபூர்வமான பொருள் நகர்த்தல் தொடர்பான உள்ளக கடல் போக்குவரத்தின் தேவையினை கொண்டிருக்கின்ற அதேவேளை சிறிலங்கா கடற்படையினர் சிறிலங்காவின் இறையான்மையையும் ஆட்சி ஒருமைப்பாட்டையும் பேணிபபாதுகாக்க வேண்டிய நியாயமான கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் உறுதிப்பாட்டினை அச்சுறுத்தும் வகையில் கடலில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விபரீத சம்பவங்களைத் தடுப்பதற்கு சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதன்படி இருதரப்பும் தத்தமது கடற்படையினரின் நடவடிக்கைகள் தொடர்பான ஒழுங்கு முறைகளை இறுக்கமாக அமுல்படுத்த வேண்டும் போர்நிறுத்த உடன்படிக்கையின் கோட்பாட்டில் உள்ளபடி சிறிலங்கா அரசு. அதிலும் குறிப்பாக சிறிலங்கா கடற்படை தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை ஓர் உண்மையான கடற்படைப்பிரிவாக ஏற்று அங்கீகரிக்க வேண்டும். அத்தோடு கடற்கலங்களின் வெளிஇணைப்பு இயந்திரங்களின் குதிரைவலு தொடர்பான சட்டங்களில் இருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் நீக்கப்பட வேண்டும்.

இருதரப்புக் கப்பல்களும் 1982 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தின்படியான கடல்சார் சட்டங்களுக்கு அமைவாக பதிவு செய்யப்பட வேண்டும். உறுதியான நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் பரஸ்பரம் கட்டியெழுப்பும் முகமாக சிறிலங்காக் கடற்படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளும் பயிற்சிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தத்தமது கப்பல்களில் மற்றைய தரப்புக் கண்காணிப்பாளர்களை கண்காணிக்க அனுமதிக்கவேண்டும்.

அத்தோடு பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான அறிவித்தல்கள் ஒரு நடைமுறையைப் போன்று வழக்கமாகச் செய்யப்படவேண்டும்.

புரிந்துணர்வு முறைகளைத் தடுப்பதற்கும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் முழுமையான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் இருதரப்புக் கப்பல்களும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நடு நிலையாளர்களின் தொலைத் தொடர்பு அலைவரிசையான "அலைவரிசை16" ஐ தொடர்பு கொள்ளவேண்டும்.

சிறிலங்கா கடற்படையோ அல்லது கடற்புலிகளோ கடலில் தாக்குதல் ரீதியான அல்லது ஆக்கிரமிப்பு ரீதியான நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் மேற்கொள்ளுமிடத்து இருதரப்புக் கடற்கலங்களுக்கும் இடையிலான ஆகக் குறைந்த தூரமாக ஒரு கடல் மைல் காணப்படவேண்டும்.

அத்தோடு அவசர நேரங்களிலோ பதற்ற நிலைகளின் போதோ இருதரப்புக் கடற்கலங்களுக்கும் இடையிலான து:ரமானது இணக்கப்பாடு காண்பதற்கு ஏற்றவாறு குறுகியதானதாகத் தேவைப்படுகின்றது.

சிறிலங்கா கடற்படையினருக்கோ அல்லது கடற்புலிகளுக்கோ சொந்தமான அனைத்து கடற்கலங்களிலுமுள்ள அனைத்து சிப்பந்திகளும் கடல்சார் மற்றும் கடற்படையணிகளுக்கான நன்நெறிமுறைகளை பார்க்கவும் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகள் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும் தெளிவூட்டலும் செய்யப்பட வேண்டும்.

சிறிலங்கா கடற்படையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளும் கடலில் தமது பயிற்சிகளுக்கும் அப்பியாசங்களுக்குமான கடற்பரப்பு எல்லைகளை நிர்ணயித்திருத்தல் வேண்டும்.

அத்தோடு கடற்கலம் செலுத்துதல் மற்றும் நேரடி சூட்டுப்பயிற்சி போன்றவற்றிற்கான வரையறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகள் நிர்ணயிக்கப்பட்ட பயிற்சிக்கும் அப்பியாசங்களுக்குமான பரப்பு எல்லையை தாண்டி தமது கடற்கலங்களில் படைக்கலங்களையோ வெடிபொருட்களையோ கொண்டு செல்லக் கூடாது.

சட்டபூர்வமான கடல்சார் விநியோக வழிகள் இருதரப்பும் ஆளணிகளுக்கும் படைசாரா பொருட்களுக்குமான போக்குவரவுக்கான சட்டபூர்வமான கடல்சார் விநியோக வழிகளையும் அதற்கான பாதுகாப்பையும் ஏற்படுத்துவதில் உள்ள சாத்திய நிலைமை தொடர்பாக ஒன்று கூடி கலந்தாலோசிக்க வேண்டும்.

இலங்கைபோர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடல் சார் கண்காணிப்பு குறித்த முன்மாதிரியான அம்சங்களை நெறிப்படுத்தும் முகமாகத் பொதுவான முறைமைகளை கொண்டிருக்கின்றது. அத்தோடு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு கடற்கண்காணிப்பாளரால் மிகக் குறுகிய கால அறிவித்தலுக்கிடையிலேயே சம்பவ இடத்துக்கு விரைந்து செயற்படக் கூடியதாக அறிவித்தல்கள் உரிய முறையில் வழங்கப்படல் வேண்டும்.

கடல் சார் சம்பவம் நடைபெறும் இடத்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்படுமிடத்து சம்பவ இடத்துக்கு கடற் கண்காணிப்பாளர்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்படுவர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உடன்பாட்டுக்கான அடிப்படை முன் நிபந்தனையாக இருதரப்பும் எவ்வாறான நிலைமைகளின் போதும் இக்குழுவை சேர்ந்த பிரதிநிதிகளின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதோடு இக்குழுவின் நடுநிலைச் செயற்பாட்டை உண்மையாக ஏற்றுக்கொள்கின்றோம் என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

அத்தோடு இக் குழுவின் ஆளணியினருக்கு அச்சுறுத்தலாக எந்தவொரு படையாளியும் இருப்பாராயின் அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட நடைமுறை குறித்த விடயங்களும் இருதரப்பினராலும் வரைபு செய்யப்பட வேண்டும்.

இவ்வரைபு செய்யப்பட்ட இவ்விபரத் தொகுப்புக்கள்யாவும் இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்துக்கு அனுப்பப்பட வேண்டும். இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவானது இருதரப்பு ஒருமைப்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு முன்மொழிவை ஏப்ரல் 21 க்கு முன் இருதரப்புக்கும் அனுப்பி வைக்கும்.

அத்தோடு ஏப்ரல் 24 ஆம் நாள் இருதரப்பையும் சேர்ந்த சிரேஷ்ட கடற்படையதிகாரிகளும் அரசியல் துறை பிரதிநிதிகளும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் ஓமந்தையில் உள்ள இருதரப்பு நடுநிலை பகுதியில் சந்தித்து நடைமுறைகளையும் ஒழுங்கு முறைகளையும் உறுதி செய்வது தொடர்பாக கலந்துரையாட உள்ளனர். இச்சந்திப்பை நோர்வே அரசு ஏற்பாடு செய்யும்.

இதேவேளை ஏப்ரல் 24 ஆம் நாள் இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு இருதரப்புப்பிரதிநிதிகளையும் தனித்தனியாகச் சந்தித்து நடைமுறைகள் தொடர்பாக விவாதிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்கின்றது என போர்நிறுத்த கண்காணிப்புகுழுத் தலைவரின் சிபாரிசு வரைபில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# பொலிசாரைத் தாக்கிய ஆளும்கட்சி பாராளு. உறுப்பினரைக் கைது செய்ய முடிவு

## - தாக்குதலில் இரு பொலிசார் காயம்

(கொழும்பு)

நுவரெலியாவில் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கியதாக கூறப்படுகின்ற கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரை கைதுசெய்வதற்குப்பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் நுவரெலிய நகரில் வைத்து மது போதையில் பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கியுள்ளார். இதனால் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.இந்த சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு தாக்கியதாகக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்ய அனுமதி பெறப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் ஓட்டப்போட்டியொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலும் தாக்குதல் நடத்திய குறித்த பாராளுமன்ற உறுப்பினர் பொதுமக்களால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிபார்சு தனிநாட்டை அமைக்க வழிவகுக்கும்

## - ஜே.வி.பி. அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணியை கடற்படைப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிபார்சு செய்துள்ளமை தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு வழிவகுப்பதாக ஜே.வி.பி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்குறித்து சட்டபூர்வ பொறுப்புள்ள நாட்டின் தலைவரான சனாதிபதி மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்றும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணி உத்தேச ஆலோசனை நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தல் ஆகும் என்று தெரிவித்துள்ளது.

எனவே போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்துத் தெளிவாக விளக்கம் அளிக்க வேண்டும்என்று அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# வீட்டுப் பணிப்பெண்களுக்கும் சேமலாப நிதியளிக்க முடிவு

இந்த நாட்டில் வீட்டுப் பணிப்பெண்களாகவும், வீடுகளில் வாகன சாரதிகளாகவும் கடமையாற்றும் சகலரையும் ஊழியர் சேமலாப நிதியில் பங்குதாரர் ஆக்குவதற்கான சட்ட திட்டங்கள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வெளியிடப்படும். என்று தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக வீட்டுப்பணிப் பெண்கள், சாரதிகள் பற்றி விரிவான கணிப்பீடு ஒன்று நடைபெற்றுவருவதாக கூறிய அமைச்சர், இவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிசம்பந்தமான திருத்தச் சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் தான்சமர்ப்பிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# வாகன வெளிச்சத்தில் தடுமாறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்தார்!

வாகன வெளிச்சத்தில் தடுமாறி பாலத்திலிருந்து தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கிய நிலையில் கிளிநொச்சி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றது.

மாயவனூரைச் சேர்ந்த ஆரோக்கியம் (வயது-58) என்பவரே இந்த நிலைமைக்கு ஆளானார்.

சம்பவ இரவு அன்னைபூபதி நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த நபர் கன்டர் வாகன வெளிச்சத்தில் திணறி 10 அடி ஆழமான பாலத்தின் கீழ் வீழ்ந்தார். பின்னர் மயங்கிய நிலையில் மக்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். (12)

# வருடாந்த பொதுக்கூட்டம்

கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 30.04.2003 காலை 10.00 மணிக்கு பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் முக்கிய திட்டங்கள் பற்றி ஆராய இருப்பதால் சங்கத்தின் பொதுச்சபை. போராளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (லோ)

அறிவியல் உலகில்

# கணினி வைரஸ்

கணினி வைரஸ் குறித்து கணினி உலகில் பரவலாகப் பேசப்படுவதுண்டு. அடிக்கடி இதுகுறித்த தகவல்கள் செய்தித்தாள்கள் என்பனவற்றிலும் வருவது உண்டு. இக்கணினி வைரஸ் என்றால் என்ன? நாம் சாதாரணமாக நினைப்பது போல அதாவது நோயை உண்டாககும் வைரஸ் போல இவை கிருமிகள் அல்ல. இவை கணினியை இயக்குபவருக்குப் பரவக்கூடியவையும் அல்ல. இவை உண்மையில் செய்நிரலாக்கங்கள் **(Programs)** ஆகும். அதாவது கணினிக்கு வழங்கப்படும் கட்டளைத் தொகுப்புகளாகும். இக்கட்டளைத் தொகுப்புகளானது கணினியை இயக்குபவரின் கட்டளைக்கு அடிபணியாது கணினியைச் செயற்படச் செய்கின்றன. உதாரணமாக கணினியில் பதிவுசெய்து வைக்கப்பட்ட தரவுகள் அனைத்தையும் நாசம் செய்யக்கூடிய வைரசுக்கள் கூட உள்ளன.

ஆரம்பகாலத்தில் கணினி புரோக்கிராம்கள் சில கணினியிலுள்ள தகவல்களை நகல் எடுக்காது தடுப்பதற்காக கணினிவல்லுனர்களால் எழுதப் பெற்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு கணினியில் பல நாசவேலைகளைச் செய்யும் கணினி வைரஸ் புரோக்கிராம்கள் இப்பொழுது புதிது புதிதாக எழுதப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் கணினி புரோக்கிராம் எழுதுவதில் வல்லுனர்களான சிலர் குறும் புக்காகப் பாதிப்பை ஏற்படுத்தாத -வைரஸ் புரோக்கிராம்களை எழுதினர். பின்னர் சிலர் தமது வித்துவத்திற னைக் காட்டவும் சிலர் உண்மையிலேயே அழிவு வேலைகளைச் செய்யவும் இவற்றை எழுதத்தொடங்கினர்.

இவற்றை ஏன் வைரஸ் என அழைத்தனர்? இவை நாம் சாதாரணமாக அறிந்துள்ள வைரஸ் கிருமிகள் போல இவையும் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குப் பரவக்கூடியவை. அத்துடன் மிக வேகமாகத் தொழிற்பட்டு தமது வேலையைக் காட்டுபவை. அதிகம் அழிவு வேலையிலேயே இவ் வைரசுகள் ஈடுபடுகின்றன.

வைரஸ் என்ற வார்த்தை 1986 இல் தான் முதன்முதலில் கணினி உலகில் தாக்கம் விளைவிற்கும் அளவில் பரவலாகப் பேசப்பட்டது. அப்போது இரண்டு வைரசுகள் மட்டுமே இருந்தன. ஆனால் 1994இல் இவை ஆயிரம் வகைக்குமேல் இருந்தன. இப்பொழுது 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட வைரசுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாதாந்தம் நூறுக்கும் மேற்பட்ட வைரசுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டு வருவதாக கணிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக மென் தட்டுகள் சீடிகளினூடாகத் தான் வைரசுகள் பரவுகின்றன என தெரிவிக்கப்படுகிறது. அதனைவிட இணையம், மின்அஞ்சல் மூலமும் பரவும் வைரசுகளும் உள்ளன.

வைரசுகள் பலவகை. அவை செயற்படும் விதமும் பல்வகையாகும். மிக அதிகமாகக் காணப்படும் வைரஸ் பூட் செக்ரர் வைரஸ் **(Boot Sector Virus)** ஆகும். இவை கணினியை இயக்க ஆரம்பித்தவுடன் இயங்கும் பகுதியாக இது இருப்பதால் இங்கு காணப்படக்கூடிய வைரசுக்கள் அங்குள்ள கோப்புக்களைப் பாதிப்பதுடன் தொற்றிக் கொள்ளக் கூடியதாக கணினியில் காணப்படுகின்றன. இவை பொதுவாக புளொப்பிகள் மூலம் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குப் பரவுகிறது. அத்துடன் இந்த வைரசால் பாதிக்கப்பட்ட பைல்களில் பாதிப்பு உடனடியாகத் தெரிவதில்லை. பின்னர் அது திடீரென கணினிகளில் பல விளைவுகளை ஏற்படுத்தும்.

சில வைரசுகள் கணினியிலுள்ள பைல்களின் பெயர்களைத் தானாக மாற்றியமைத்து கோளாறுகளை உருவாக்கும். இதனால் கணினியின் இயக்கம் பாதிப்பை அல்லது முற்றாகச் செயலிழக்கும் வாய்ப்பு உள்ளது.

அத்துடன் பன்மடங்கு பெருகும் வைரஸ், எழுதியதை அழித்து வேறேதாவது தகவலை எழுதும் வைரஸ் என்பனவும் உள்ளன.

பலவிதமான வைரசுகள் இருப்பது போலவே அவற்றில் பலவிதமான குண இயல்புகளும் உள்ளன. வேகமாகப் பரவும் வைரஸ், மெதுவாகப் பரவும் வைரஸ், இரகசியமாக இயங்கும் வைரஸ், ஒவ்வொரு வேளைக்கு வெவ்வேறு வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் வைரஸ் என பலவிதமான குண இயல்புகளைக் காட்டுகின்றன.

வேகமாகப் பரவும் வைரஸ்மிக விரைவில் பாதிப்பை ஏற்படுத்தும் ஆனால் இலகுவாக வைரஸ் தாக்கத்தைக் கண்டு பிடித்து விடலாம். ஆனால் மெதுவாகப் பரவும் வைரஸின் தாக்கத்தை உணர்ந்து கொள்வது கடினம். இதனால் கண்டு பிடிக்கும் காலம் வரும் போது அது பல அழிவு வேலைகளைச் செய்து முடித்திருப்பதுடன், பாதிப்புற்ற கணினியில் பாவிக்கப்பட்ட புளொப்பிகளை வேறொரு கணினியில் பாவித்தால் அதற்கும் தொற்றிவிடும்.

ரகசியமாகச் செயற்படும் வைரஸ் நினைவகத்தில் தங்கிக் கொண்டு இயக்கப்படும் பைல்களில் தொற்றிக் கொள்ளும். அத்துடன் நினைவகத்தின் பகுதிகளை இது ஆக்கிரமித்துக் கொள்வதால் பயன்படும் நினைவகத்தின் அளவு குறைந்துவிடும்.

வெவ்வேறு வேடங்களில் உலவும் வைரசைக் கண்டுபிடித்து அழிப்பது கடினம் இது வெவ்வேறு வேளையில் வெவ்வேறு மாற்றங்களை கணினியில் உள்ள பைல்களில் உருவாக்கும்.

இவ்வாறான வைரசுகள் பரவுவதைத் தடுப்பது எவ்வாறு? வேறு கணினிகளில் பாவிக்கப்பட்ட புளொப்பிகளைப் பயன்படுத்துவதால் அதிக பாதிப்பு ஏற்படுவதால் அவ்வாறு புளொப்பிகளை மாற்றிப் பாவிக்காது பாதுகாக்கலாம்.

அதேவேளை வலைப்பின்னலிலுள்ள கணினிகளுக்கும் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குப் பரவும் என்பதால் வலைப்பின்னல்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

ஆனால் இவ்வாறான பாவனைகள் தவிர்க்க முடியாதவை எனின் வைரசுகளைக் கண்டு பிடித்து அழிக்க விசேட புரோக்கிராம்கள் உள்ளன. இவற்றை அன்ரிவைரஸ் **(Anti virus)** என அழைப்பர். இந்த வைரஸ் நீக்கிகள் மூலம் இவற்றை நீக்கலாம். எவ்வாறாயினும் இப்பொழுது புதிய புதிய வைரஸ் புரோக்கிராம்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் அன்ரி வைரஸ் புரோக்கிராம்களையும் புதிது புதிதாக உருவாக்க வேண்டியுள்ளது.

இது அழிவு சக்திகள் செய்யும் தேவையற்ற ஒரு நடவடிக்கையாயினும் வைரஸ்கள் கணினியில் பல நாசங்களை விளைவிப்பதால் அது குறித்து எச்சரிக்கையாயிருக்க இருக்க வேண்டியது அவசியமாகவேயுள்ளது.

**சி.சிவபாலன்**

---

## தமிழ்மொழி மூல ஆசிரிய பிரச்சினைக்கு பேசியே தீர்வுகாண முன்வர வேண்டும்

### - கல்வியமைச்சர் தரும் அறிவுரை

(கொழும்பு)

தமிழ்மொழி மூல ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக தவறான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக என்னுடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல வேண்டும் என்று கல்வி கலாசார, மனிதவள அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது.

தமிழ்மொழி மூல ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழிமூல ஆசிரிய நியமனங்கள் தொடர்பான சகல பொறுப்புக்களையும் மத்திய கல்வி அமைச்சு மாகாணசபையிடமே வழங்கியுள்ளது. மாகாணசபைகளும், அரசசேவைகள் ஆணைக்குழுவும் இணைந்தே நியமனம் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

எனவே ஆசிரிய நியமனங்கள் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையையும் தனிப்பட்ட அமைப்புக்கள் அல்லது நிறுவனங்கள் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லை.

தமிழ்மொழி மூல ஆசிரியர் நியமனங்களில் நேர்மைக்கும் சட்டத்திற்கும் முரணான விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை.

இதேவேளை, ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் தொடர்பு கொண்டு நேரடிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நிதிமோசடி அம்பலமானது கணக்காய்வாளர் கைது

(கொழும்பு)

மத்திய மாகாணக் கல்வி அமைச்சில் பலகோடி ரூபா நிதிமோசடி செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மத்திய மாகாணக் கல்விஅமைச்சின் கணக்காய்வாளரை இம்மாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டிப் பிரதான நீதவான் லியோன் சென்விரட்ன உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இவரை பொலிஸார் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

## தொகுதி அமைப்பாளராக மீண்டும் நியமிக்க வற்புறுத்து

### - பத்திரணவுக்கு ஆதரவு வலுக்கிறது

(கொழும்பு)

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிச்சட் பத்திரணவை அவரது தொகுதியின் அமைப்பாளராக மீண்டும் நியமிக்க வேண்டும் என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சி மத்திய குழுவைக் கேட்டுள்ளார்.

டாக்கா விஜயத்தை முடித்து சனாதிபதி நாடு திரும்பியதும் இது தொடர்பாக அவருடன் பேசித் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

றிச்சட் பத்திரணவை மீண்டும் அவரது தொகுதி அமைப்பாளராக நியமிக்க வேண்டும் என தென்மாகாணசபை சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சுதந்திரக்கட்சியினர் தன்னை வலியுறுத்தி வருவதாக அநுரா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மாத இறுதியில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இதுதொடர்பான பிரேரணை யொன்றை சமர்ப்பிக்கவும் அநுரா திட்டமிட்டுள்ளார்.

## சமாதான நடவடிக்கைகளின் வெற்றிக்கு அர்ப்பணிப்புடன் பணிபுரியவுள்ளேன்

### -டாக்காவில் சனாதிபதி சந்திரிகா கருத்து

சமாதான நடவடிக்கைகளின் வெற்றிக்குத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணிபுரிய இருப்பதாக சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

பங்களாதேசிற்குச் சென்றுள்ள சனாதிபதி சந்திரிகா பங்களாதேஷ் சனாதிபதி வழங்கிய இராப்போசன விருந்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கு வழிகாட்டியாக இருக்கப் போகிறேன் என்றார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பங்களாதேஷ் வழங்கி வரும் உதவிகளுக்கும் இராணுவத்திற்கு வழங்கி வரும் உதவிகளுக்கும் நன்றி கூறிய சனாதிபதி சந்திரிகா சிற்றாகொங்கில் ஏற்பட்ட கிளர்ச்சிவாத பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு கண்ட பங்களாதேசின் அனுபவங்களை சிறிலங்கா நன்கு அறிந்து உபயோகிக்க முடியும். சிறிலங்கா இராணுவத்திற்கு வழங்கிவரும் பயிற்சி மற்றும் உதவிகளை பங்களாதேஷ் தொடர்ந்து வழங்கும் என்று சனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

## யுத்தம் நடைபெற வேண்டுமென்றே ஜே.வி.பி. விரும்புகின்றது

### - அமைச்சர் ரோஜித போகொல்கம

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றே ஜே.வி.பி. விரும்புகிறதென சிறிலங்காவின் அமைச்சர் ரோஜித போகொல்கம கூறியுள்ளார்.

புதுவருடப் பண்டிகைக்கு முன்னர் ஜே.வி.பியின் செயலாளர் விடுத்த செய்தியில் இந்த விடயம் தெளிவாகப் பிரதிபலித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் உட்பட அதன் சிரேஷ்ட அங்கத்தவர் அனைவரும் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டு வசதியான வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியா வைத்தியசாலை மருத்துவர்கள் வேலை நிறுத்தம்

### - தாதியரும் போராட்டத்தில் குதிப்பு

வவுனியா பொதுவைத்திய சாலையில் பணிபுரியும் மருத்துவர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இதற்கு ஆதரவாக தாதியரும் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தியட்சகரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படவேண்டும், வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

# மூதூரில் அச்சநிலை தொடர்ந்து நீடிப்பு; 30,000 பேர் வன்முறையால் பாதிப்பு!

(திருமலை)

**மூதூரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் 8,142 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தமிழர்களைப் பொறுத்து மூதூர் அந்தோனியார் ஆலயத்திலும் மெதடிஸ்த ஆலயத்திலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

முஸ்லிம்களைப் பொறுத்து அரச பாடசாலைகளிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். மூதூர் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்கவென பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதும் மூதூர்ப் பகுதியில் பதற்ற நிலை நிலவுகிறது. இதனால் இரவில் வீடுகளில் தங்குவதற்கு மக்கள் அச்சப்பட்டு பொது இடங்களில் தங்குவதாக மூதூர்ப் பிரதேசச் செயலர் ஆறுமுகம் நடராசா தெரிவித்துள்ளார்.

## மலசலகூடம் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள சுரபி முன்பள்ளி வளாகத்தில் நிக்கோ திட்டத்தின் கீழ் பொது மலசலகூடம் ஒன்று அமைக்கப்படுகிறது.

கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்படி வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சிறுவர் பாடசாலையில் இதுவரை மலசலகூடம் இன்மையால் சிறார்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். அத்துடன் இவ்வளாகத்தில் திருநகர் அபிவிருத்திச் சங்க அலுவலகம் அமைந்துள்ளது. (லோ)

## முல்லை. மாவட்டத்தில் 25 பள்ளிகளை புனரமைக்க 'நெக்கோட்' நிதியுதவி

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இருபத்தைந்து பாடசாலைகளை புனரமைப்பு செய்வதற்கான நிதியுதவியினை வழங்க நெக்கோட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த வகையில் கரைதுறைப்பற்று பிரதேசத்திலுள்ள சில பாடசலைகளை புனரமைக்க நிதி கிடைத்துள்ளது.

சிலாவத்தை இ.த.க. பாடசாலை, கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை, உப்பு மாவெளி அ.த.க. பாடசாலை என்பவற்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முல்லைத்தீவு றோ.க. வித்தியாலயத்துக்கு 2.4 மில்லியன் ரூபாயும், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு 9 மில்லியன் ரூபாய்களும் கிடைத்துள்ளன.

குறித்த பாடசாலைகளுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (20)

## நட்புறவை மேம்படுத்த மாணவர் வரைதல் போட்டி

சிறிலங்காவுக்கும் தாய்லாந்துக்குமிடையேயான நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் சிறிலங்கா - தாய்லாந்து சபை பாடசாலை மாணவர்களுக்கான வரைதல் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

06-08 வயது, 08-12 வயது பிரிவினர் வரை வர்ணச் சோக்கட்டி பயன்படுத்தப்படவேண்டும். 12-16 வயது பிரிவினர் நீல வர்ணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

12x16 அங்குலம் கொண்ட வரைதல் தாள் பயன்படுத்தலாம்.

மாணவர்களின் வயது, வரைந்த படம் ஆகியவற்றை பாடசாலை அதிபர் உறுதிப் படுத்தியே அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 17ஆம் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரைபடங்களை உபாலி ஜெயசேகர, பி-7, பம்பலப்பிட்டி அரசினர் தொடர் மாடி, கொழும்பு -04 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அல்லது நேரடியாகவும் கையளிக்கலாம்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

## தேசிய கல்வி ஆணைக்குழு குறைபாடுகளுக்கு சனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்.

### -கல்வியமைச்சு அறிக்கை வெளியீடு

தேசிய கல்வி ஆணைக்குழுவில் குறைபாடுகள் காணப்படுமாயின் அதற்கு சனாதிபதியே பொறுப்பு என சிறிலங்காவின் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாடநூல்கள் 1999, 2000 ஆம் ஆண்டுகளில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய தேசிய கல்வி நிறுவகத்தினால் எழுதப்பட்டது என கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடநூல்களில் பிழைகள் இருப்பதாக ஒரு போதும் எழுந்து மூலமோ அல்லது வாய் மூலமோ கல்வியமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் தேசிய கல்வி நிறுவகத்தில் காணப்படும் குறைபாடுகள் சுட்டிக்காட்டினால் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தமிழ் மொழி மூல வரலாற்றுப் புத்தகங்களில் 2500 பிழைகள் இருப்பதாக கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுவதாக கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## முல்லை – மாங்குளம் வீதி வெகுவிரைவில் புனரமைப்பு!

முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதி வெகுவிரைவில் புனரமைக்கப்படவிருப்பதாக முல்லை.அரசஅதிபர் செயலக வட்டாரங்களிலிருந்து வெளியாகும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

மேற்படி வீதி வன்னியிலுள்ள ஏனைய வீதிகளைப் போன்று நீண்ட அகலமாகப் புனரமைப்பு எதுவுமின்றி போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளமை தெரிந்ததே.

மேலும், மாகாண நன்கொடை நிதியின் ஊடாக புதுமாத்தான், இரட்டை வாய்க்கால் வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வற்றாப்பளை கேப்பாப்புலவு வீதியும் மற்றும் கள்ளப்பாடு தூண்டாப்வீதி, முல்லை.வைத்தியசாலை வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

## நாட்டில் 75 சதவீத மக்களுக்கு நான்கு வருடங்களில் மின் வழங்கல்!

### - மின்சக்தி அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

நான்கு வருடங்களில் நாட்டில் 73 சதவீதமான மக்களுக்கு மின்சாரத்தை வழங்கும் பாரிய திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய அடிப்படையிலான மின்விநியோகத் திட்டங்கள் மூலமும் கிராமமட்டத்திலான மாற்று மின் உற்பத்தித் திட்டங்கள் மூலமும் இது பூர்த்திசெய்யப்படும்.

மின் விளக்குகளுக்கு மாத்திரம் கிராமப் புறத்திலுள்ள ஒவ்வொரு வீடும் 50 யூனிட் மின்சாரத்தை உபயோகிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பாரிய மின் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தவிதப் பிரச்சினையும் எழமாட்டாது என்று அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 3 கசிப்பு விற்பனையாளர் காவல்துறையிடம் சிக்கினர்

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் மூவர் வட்டக்கச்சி காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி கைதுகள் 01-04-, 02-04, 06-04 ஆகிய தினங்களில் இடம்பெற்றன. விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படிக் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் வட்டக்கச்சிப் பகுதியில் பல இடங்களில் நடைபெறுவதாக அறியப்படுகின்றது. இது தொடர்பாக உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் நட வடிக்கை எடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

## கிளினிக் வருவோருக்கு வீடியோப் படக்காட்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனை வைத்தியசாலைக்கு வரும் கிளினிக் நோயாளர்களை ஆற்றுப்படுத்துவதற்காக வீடியோ மூலம் படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

நோயாளர்களின் உடல் உபாதை மற்றும் நீண்ட நேரம் சிகிச்சைக்காகக் காத்திருப்பதால் ஏற்படும் சலிப்பு என்பவற்றை தணித்து அவர்களை சுமுக நிலையில் வைத்திருக்க வசதியாகவே இந்தப் படக்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தொலைக்காட்சிப் பெட்டியை கொழும்பு சுகாதார கல்விப்பிரிவு தலைமைச் செயலகம் வழங்கியுள்ளது.

## கிராம அலுவலர் பிரிவுகளை விரிவாக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமசேவை அலுவலர்கள் பிரிவுகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதன் முன்னோடியாக கிளி. மாவட்ட பிரதேசசெயலர் பிரிவுகள் ரீதியாக உள்ள கிராம அலுவலர்களினால் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள குடும்பங்களின் விபரங்களைத் தருமாறு பிரதேசசெயலர்கள் கி.சே. அலுவலர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் வகையிலேயே இந்நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சமுதாய முன்னேற்ற நிலைய 4ஆம் கட்ட பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்தின் பெண்களுக்கான தொழிற் பயிற்சி நெறியின் நான்காம் கட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தையல் தையல் இயந்திரம் திருத்தல், தலை அலங்காரம், கேக் அலங்காரம், கட்டட அழகுப் பொருள் தயாரித்தல் போன்ற தொழிற் பயிற்சி நெறிகளே நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. மேறபடி கற்கை நெறியினை மேற்கொள்வதற்காக 55க்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் மங்கலவிலக்கினை கிளிநொச்சி மாவட்ட சமாதான நீதவான் ஆ.நடராசா கிளிநொச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ந.சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை மாவீரர் போராளி குடும்பநலன் காப்பக பயிற்சித் திட்டமிடற் பொறுப்பாளர் கு.சிரஞ்சீவி ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் சிறப்புரைகளை ஆ.நடராசா சமுதாய முன்னேற்ற நிலைய இயக்குனர் பூங்குன்றன் ஆகியோர் நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (லோ)

## நடமாடும் இரத்த வங்கி

(அலுவலக் செய்தியாளர்)

கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடமாடும் இரத்த வங்கி ஒன்று அமைக்கப்பட இருப்பதால் இவ்வங்கியில் இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் தமது பெயர் முகவரி போன்றவற்றை பதிவு செய்யுமாறும் அவசர தேவை ஏற்படும் பட்சத்தில் உடனடியா இரத்தம் பெறப்படும் எனவும் கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## போரினால் பாதிப்புற்றோருக்கு உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

போரினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய குடும்பங்களைச் சார்ந்த ஊனமுற்ற கண்பார்வையற்றோருக்கு சக்கர நாற்காலியும், மூக்குக் கண்ணாடியும் வழங்கும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி காலை 10.00 மணிக்கு துணுக்காய் பிரதேசத்தில் சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் வழங்கப்பட்டது. இவற்றை வழங்கும் நிகழ்வு மா.போ.கு.ந. காப்பகத்தைச் சேர்ந்த திவ்வியா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ச.மு.நிலைய நிர்வாக உத்தியோகத்தர் கணேஸ்வரன் துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சேரன் மா.போ.கு.ந.காப்பக முல்லை மாவட்டப் பொறுப்பாளர் பாண்டியன் துணுக்காய் பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பால்ராஜ். துணுக்காய் பிரதேச மாணவரமைப்புப் பொறுப்பாளர் வெண்ணிலா ஆகியோர் கலந்து கொண்டு பொருட்களை வழங்கினர். நன்றி உரையை ச.மு. நிலைய மல்லாவி இணைப்பாளர் ந.சர்மினி வழங்கினார். (லோ)



## சிந்தனைக்கு

சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் சுதந்திரம் என்னும் சுவர்க்கத்தை நாம் காணமுடியும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-04-2003

# முன்னேற்றகரமானது!

சிறிலங்கா கடற்படைக்கும், கடற்புலிகளுக்கும் இடையிலான மோதல்களைத் தவிர்க்கவும், போர்நிறுத்தத்தை வலுவுடைய தாக்கும் நோக்கில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் முன்வைத்துள்ள முதற்பணி அறிக்கை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது. ஊடகங்களில் வெளியாகிய இத்தகவல்கள் சரியாயின் கடற்பரப்பில் போர் நிறுத்தம் உறுதியான முறையில் கைக்கொள்ளப்படுவதற்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான முயற்சியினை மேற்கொண்டுள்ளார் என்றே கூறலாம்.

தற்பொழுது வெளியாகியுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரின் சிபார்சுகள் குறித்து அரசாங்கத் தரப்போ அன்றி புலிகள் தரப்போ உத்தியோகபூர்வமான இச்சிபார்சுகள் குறித்து அபிப்பிராயம் எதையும் வெளியிடவில்லை. ஆயினும், சிறிலங்கா கடற்படைத் தளபதி தயா சந்தகிரி பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கூறு கின்றன.

ஆனால், இச் சிபார்சுகளை சிறிலங்கா அரசாங்கமோ அன்றி விடுதலைப்புலிகளோ, ஏற்கின்றார்களோ அன்றி நிராகரிக் கின்றார்களோ அது அவர்கள் தொடர்பான விடயமே ஆகும். ஆனால் ஒன்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் சிபார்சுகள் ஓரளவேனும் யதார்த்தத்தினை அடியொற்றியதாகக் கூறப்பட்டுள்ளது என்பது நிராகரிக்கப்பட முடியாததொன்றே.

அதிலும் குறிப்பாக, சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளின் கடற்படையை அங்கீகரிக்க வேண்டும் என்ற சிபார்சானது முதன்மையானதே. ஏனெனில், அதுவே யதார்த்தமானதாய் உள்ளது. அதாவது, விடுதலைப்புலிகள் தரையில் ஓர் இராணுவக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது போன்று கடற்படைக் கட்டமைப்பு ஒன்றையும் கொண்டுள்ளனர். அதாவது, கடற்படைக்கெனச் சண்டைப் படகுகள், கடற்சண்டைக்குப் பயன்படக்கூடிய நவீன உபகரணங்கள், கடற்சண்டையில் பயிற்சி பெற்ற போராளிகள் என்பனவற்றைக் கொண்டுள்ளனர்.

இது மாத்திரமல்ல, பல கடற்சமர்களைக் கடற்புலிகள் நடத்தியுள்ளதோடு, அதில் பல வெற்றிகளையும் குவித்துள்ளனர். அத்தோடு, தரைச் சண்டையில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளுக்குப் பல்வேறு வழிகளில் கடற்புலிகள் உதவியும் உள்ளனர். மேலும், விடுதலைப்புலிகளின் விநியோகம் மற்றும் போராளிகளின் நகர்வுகள் என்பனவற்றிலும் கடற்புலிகள் முக்கிய பங்காற்றி வந்துள்ளனர்.

அடுத்ததாக, தரைப்பகுதியில் எவ்வாறு கட்டுப்பாட்டுப் பகுதிகளை விடுதலைப்புலிகள் தமக்கெனக் கொண்டிருந்தார்களோ அதேபோன்று கடற்பகுதியிலும் தமக்கெனக் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களைக் கொண்டுள்ளனர். இப்பகுதிக்குள் சிறிலங்கா கடற்படை பிரவேசிப்பதையே பெரும்பாலும் நிறுத்தியிருந்தது என்பதே கடந்த கால வரலாறாகும்.

அதுமட்டுமல்ல, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தரைப் பிரதேசத்தை அண்டியதாகக் கடற்பரப்பின் ஊடாகக் கூட செல்வதை சிறிலங்கா கடற்படை தவிர்த்தே வந்தது. இதனால் திருமலையில் இருந்து காங்கேசன்துறை வரையில் இடம்பெற்ற கப்பல் போக்குவரத்து கரையோரத்தில் இருந்து குறைந்தது 25 கடல் மைல் தொலைவுக்கு அப்பால் இடம்பெற்றது. சிலவேளைகளில் இத் தேவையானது 40 கடல் மைல் தொலைவையும் தாண்டியதாகவும் இருந்தது. அவ்வாறான பயணங்கள் கூட ஆபத்தானதாக இருந்தமையால் மிகவும் இரகசியமாகவும், பலத்த பாதுகாப்புடனுமே மேற்கொள்ளப் பட்டதுண்டு.

இந்த வகையில், விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணி கடற்படை போன்று செயற்பட்டுமட்டுமல்ல, கடற்பிரதேசத்தில் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் கொண்டிருந்தது என்பதே கடந்த கால யதார்த்தமாய் இருந்தது. அத்தோடு, கடற்புலிகள் போக்குவரத்திற்கெனவும், கடற்பிரதேசத்தைப் பயன்படுத்தி வந்துள் ளனர்.

இத்தகையதொரு நிலையில், செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாடானது கடற்பிராந்தியம் தொடர்பாக திட்டவட்டமான வரையறைகளைச் செய்யத்தவறியதினால், ஏற்பட்ட யுத்த நிறுத்த மீறல்களைத் தொடர்ந்து கடற்பிராந்தியத்தில் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வது குறித்த வழிவகைகளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆராய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் செயற்பாடே ரெலவ்சன் அவர்களின் சிபார்சுகள் ஆகும்.

ஆனால், ரெலவ்சன் அவர்கள் தமது சிபார்சுகளால் தமது விருப்பு வெறுப்பிற்கோ அன்றி ஒருதலைப்பட்சமாகவோ மேற் கொண்டதாகத் தெரியவில்லை. யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் என்ற ரீதியிலுமே அவர் தனது சிபார்சுகளை முன்வைத்துள்ளதாகத் தெரிகின்றது. இதில் சில விடயங்கள் கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டியவையாக இருக்கலாம். ஆனால், கண்காணிப் புக்குழுத் தலைவரின் சிபார்சுகள் கடலில் போர் நிறுத்தத்தை அமுல் செய்வதற்கு முன்னேற்றகரமானதொரு ஆலோசனைகளாக உள்ளது என்றே கொள்ளலாம்.

# காரணமின்றிக் கைது செய்யப்பட்டு
# 10 வருடங்கள் சிறையில் வாடுகின்றேன்!

## - விடுதலைக்கு ஏங்கும் தமிழ் பொதுமகன்

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக சிறையில் வாடுகிறேன். எனது மனைவியையும் மூன்று குழந்தை களையும் சீனன்குடா அகதி முகாமில் வைத்துப் பிரிந்தேன். அவர்கள் தற்போது வறுமையில் வாடிவதங்கி வருகிறார்கள். மனைவி நெற்கதிர் பொறுக்கியே குடும்பத் தைப் பராமரித்து வருகிறார். கடந்த 7 வருடங்களாக 63 தடவைகள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டும் விசாரணை இன்னமும் பூர்த்தியடை யாது சிறையில் வாடி வருகிறேன்" இவ்வாறு களுத்துறை சிறைக் கைதியான செ.லிங்கரத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, நான் 18-07-1992 அன்று திருமலை பொலிசாரால் சீனன்குடா அகதி முகாமில் வைத்துக் கைது செய்யப் பட்டேன். கைதுக்கு எந்தவித காரணமும் கூறப்படவில்லை.

பலவித உடல்சித்திர வதைகளுக்குப் பின்னர் சிங்கள மொழியில் தட்டச்சுச் செய்யப்பட்ட தாள்களில் பலாத்காரமாகக் கையெழுத்துப்பெற்றனர்.

19-07-1992 திருமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டேன். பின்னர் 02-10-1996 இல் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதையடுத்து மகசின் சிறைக்கும் பின்னர் களுத்துறைச் சிறைக்கும் மாற்றப்பட்டேன்.

1996ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 63 தவணைகள், கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக விசாரணைக்குச் சென்று வருகின்றேன். இதுவரை தீர்க்கமான எந்த முடிவும் கிட்ட வில்லை. தற்போது வழக்கு வெலிக் கடை விசேட நீதிமன்றுக்கு மாற்றப் பட்டுள்ளது. எனது விடுதலைக்கு அல்லது வழக்கைத் திருமலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு வேண்டுகிறேன் என அக்கடி தத்தில் குறிப்பிட்டுள்ளார்.


# பெற்றோருக்கான பாடசாலைகளை முதற்தடவையாக இயக்க நடவடிக்கை

இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக பெற்றோர் பாடசாலை அறிமுகமாகியுள்ளது.

முதற்கட்டமாக இப்பாடசாலை கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று வலயங்களிலும் ஏற்படுத் தப்படும். குறிப்பாக மிகவும் பின் தங்கிய பிரதேசங்களில் இவை அமையவிருக்கின்றன.

பெற்றோரிடையே கல்வி தொடர் பாகவும் தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் கல்வியின் முக்கி யத்துவம் தொடர்பாகவும் விழிப் புணர்வு ஏற்படுத்துவதே இப்பாட சாலையின் பிரதான நோக்கமாகும்.

14 வயதுக்கு உட்பட்ட மாணவர் களின் பெற்றோர் மாத்திரமே இப்பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்களுக்கு வாரத்தில் இரு மணிநேரமே வகுப்புக்கள் நடைபெறும். உணவு முதல் சகல உதவிகளும் இலவச மாக வழங்கப்படவுள்ளது. கல்வி யமைச்சின் அனுசரணையுடன் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.




## நெகேரா விரைவில் குணமடைவார்

அறுவைச் சிகிச்சைக்காக தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் நெகேரா எதிர்பார்த்ததைவிட ஒரு மாதம் முன்பாகவே குணமடைந்து விடுவார் என்று அவருக்கு சிகிச்சை யளிக்கும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் இடது கை வேகப்பந்து வீச்சாளரான நெகேரா வுக்கு தென்னாபிரிக்கா விலுள்ள மருத்துவமனையில் கடந்த வியாழனன்று வெற்றிகரமாக அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரில் நெகேரா மீண்டும் விளையாடவுள் ளார். அதன்பொருட்டு போதிய ஓய்வு எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது.

## மென்பந்தாட்டப் போட்டியில் கண்டாவளை முதலிடம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை பிரதேச செயலர் பிரிவு களிற்கிடையிலான குழுப் போட்டிகள் கடந்த 17ஆம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நேற்றுவரை நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 15 ஓவர் கொண்ட மென்பந் தாட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவு முதலிடத்தையும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

உதைபந்தாட்டப் போட்டியில் கரைச்சிப் பிரதேச அணி பூநகரி பிரதேச அணியையும் கண்டா வளைப்பிரதேச அணி பளைப்பிரதேச அணியையும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இப்போட்டிகளுக்கான ஏற் பாடுகளை மாவட்ட விளையாட்டு அதிகாரி சு.கனகராசா, மாவட்ட பயிற்சி நிலைய விளையாட்டு அதிகாரி க.புவனேந்திரராசா, மாவட்டச் செயலக விளையாட்டு அதிகாரி செல்வி.சி.மனோன்மணி ஆகியோரின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் யாவும் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. (சோ)

# அஜய் ஜடேஜாவை மீண்டும் அணியில் இணைக்க ஒப்புதலுக்குக் காத்திருக்கிறது கிரிக்கெட் வாரியம்

## - ஜக்மோகன் டால்மியா

கிரிக்கெட் வீரர் அஜய் ஜடே ஜாவை மீண்டும் இந்திய அணியில் சேர்த்துக்கொள்வது குறித்து சட்ட ரீதியான ஒப்புதலுக்குக் காத்திருப் பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

சூதாட்டக் குற்றத்தின் பேரில் கிரிக் கெட் வீரர் அஜய் ஜடேஜா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளை யாட இந்திய கிரிக்கெட் வாரியம் ஐந்து ஆண்டுகள் தடைவிதித்தது.

இதை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் ஜடேஜா வழக்குத் தொடர்ந்ததையினால் அவர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தவறு எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜடேஜாவை அணியில் சேர்த்துக்கொள்வது குறித்து சட்ட ரீதியான ஒப்புதலுக்கு காத்திருப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் ஜக் மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷ் அணிக்குப் பயிற்சியளிக்க டேவ்வட்மோர் சம்மதம்

பங்களாதேஷின் தேசிய கிரிக்கெட் அணிக்குப் பயிற்சி அளிக்கப் போவதாக சிறிலங்கா அணியின் தற்போதைய பயிற்சியா ளர் டேவ்வட்மோர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் யூன் மாதத்தில் பங்களாதேசின் கிரிக்கெட் அணியின் பொறுப்புக்களை கையேற்கவுள்ள தாக டேவ்வட்மோர் தெரிவித்துள் ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் மாநாட்டிலேயே அவர் இத்தக வலைத் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 31ஆம் திகதியுடன் டேவ் வட்மோரின் பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக 1995ஆம் ஆண்டு பொறுப்பேற்ற வட்மோர் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் சிறிலங்கா அணி கோப்பையைக் கைப்பற்றப் பெரும் உறுதுணையாக இருந்தார்.

பின்னர் சிலகாலம் பயிற்று விப்பாளர் பதவியில் இருந்து வில கியிருந்த வட்மோர் மீண்டும் 1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியின் பின் சிறிலங்கா அணி யின் பயிற்றுவிப்பாளராக நியமிக் கப்பட்டார்.

# ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை

## ஜே.வி.பி. திட்ட வட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு தாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஜே.வி.பி.யினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அக்கட்சி அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

நுவரெலியாவில் சிறிலங்காப் பிரதமர் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜே.வி.பி. இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. தேசப்பற்றுடைய ஒரு கட்சியாகும். எனவே நாடு பிளவுபடுவதற்கு உறுதுணையாக இருக்க முடியாது.

ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து செயலாற்றப் போவது குறித்து சிறிலங்காப் பிரதமர் அச்சம் கொண்டுள்ளார். இந்த அச்சத்தின் காரணமாகவே அவர் ஜே.வி.பி.யின் ஆதரவைப் பெற முயல்கின்றார் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் பணிமனையின் முக்கிய வேண்டுகோள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு தாய் பெற்று வளர்த்து, பிள்ளைகள் எமது அமைப்புப் போராட்டத்தில் இணைந்து, நான்கு பிள்ளைகள் வீரச்சாவடைந்து மாவீரராகி இருந்தால் இயக்கப் பெயர், சொந்தப் பெயர், முகவரி, தற்காலிக முகவரி, வீரச்சாவடைந்த திகதி, சம்பவம் ஆகிய விபரங்களை கீழ் வரும் முகவரிக்கோ அல்லது அருகாமையிலுள்ள அரசியல்துறை செயலகத்திலோ, மாவீரர் பணிமனையிலோ தொடர்பு கொண்டு அறியத்தருமாறு விநயமாக வேண்டுகிறேன்.

**பொறுப்பாளர்,**
**தமிழீழ மாவீரர் பணிமனை,**
**மாரியம்மன் வீதி.**
**மு/புதுக்குடியிருப்பு.**

# ஜப்பான் அரசு சிறிலங்காவிற்கு 2 கோடி 80 லட்சம் ஜென் கடன் வழங்கும்

ஜப்பானிய அரசாங்கம் சிறிலங்காவிற்கு இரண்டு கோடி 80 லட்சம் ஜப்பானிய ஜென்னை கடனாக வழங்க இருக்கின்றது.

ஜப்பானிய அரசாங்கத்தின் அடிப்படைச் சலுகை, அடிப்படைக் கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஜப்பானிடமிருந்து சிறிலங்கா பெறும் 29ஆவது சலுகை அடிப்படைக் கடனாகும்.

இக்கடனுக்கான ஒப்பந்தம் நிதி அமைச்சில் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# மண்டூர்- குருமண்வெளிக்கிடையே பாலமில்லாமையால் சிரமம்

மண்டூருக்கும் குருமண் வெளிக்கும் இடையே பாலம் அமைக்கப்படாத நிலையில் இப்பகுதி மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். ஆரம்ப காலம் முதல் பாலம் இல்லாத காரணத்தால் படுவான் கரைப் பகுதிக்கு மக்கள் இயந்திரப்படகின் மூலமே பயணம் செய்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தும் பலனேதும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஓட்டுக்கு வைத்த தீயினால் 3 ஏக்கர் வயல் எரிந்து நாசம்

தடை செய்யப்பெற்ற வயலில் ஓட்டுக்கு வைத்த தீ அருகிலிருந்த வயலுக்குத் தாவியதில் மூன்று ஏக்கர் நெல் வயல் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் 20ஆம் திகதி கிளி. 5ஆம் வாய்க்கால் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நெற் சூடு வைப்பதற்குத் தயாராக நெற் கதிர்களைக் கட்டுவதற்கு ஆயத்தப்படுத்திய வேளையில் அருகாமையிலுள்ள வயலில் ஓட்டுக்கு வைத்த தீ பரவி மேற்படி 3 ஏக்கர் வயலில் இருந்த நெற்கதிர்களை சாம்பலாக்கியுள்ளது.

ஆறுமுகம் உதயசேகரம் என்பவரது நெல் வயலே இச்சம்பவத்தில் முற்றாக எரிந்து சாம்பலாகிய தென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஈ.பி.டி.பி.யினரின் வசமுள்ள

# உள்ளூராட்சிச்சபை வாகனங்களை கையகப்படுத்துவது குறித்து கூட்டம்

யாழ்ப்பாணத்தில் பிரதேச சபைகளுக்காக வழங்கப்பட்ட ஆறு வாகனங்கள் ஈ.பி.டி.பி.யினரால் இன்னமும் கையளிக்கப்படாதது தொடர்பாக இன்று யாழ் செயலகத்தில் கூட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் ஆறு வாகனங்களையும் ஈ.பி.டி.பி. யினர் தமது சொந்தப் பயன்பாட்டிலேயே வைத்துள்ளனர்.

இதனால் இந்த ஆறு வாகனங்களையும் கையகப்படுத்தும் நோக்கில் இன்று அரச செயலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

### 12 ஆயிரம்...

மற்றும் வசதி குறைந்த பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் பொருளாதாரக் கஷ்டங்களின் காரணமாக தமது கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ள மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் பத்து மாதங்களுக்கு ஐயாயிரம் ரூபா நிதி புலமைப்பரிசாக வழங்கப்படவுள்ளது.

### கண்காணிப்பு...

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள படைத்துறைச் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோ சிறிலங்கா அரசின் நிலைப்பாடு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகத்தெரிவித்தார்.

அத்துடன் தமது நிலைப்பாட்டை நாளை மறுதினம் நடைபெறவிருக்கும்கூட்டத்திலேயே அறிவிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க தொழில் நிறுவனங்கள் சிறிலங்காவில் முதலீடு செய்யத் தயார்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(ஜொகனஸ்பேக்)

தென்னாபிரிக்காவிலுள்ள முக்கிய தொழில் நிறுவனங்கள் பல சிறிலங்காவில் முதலீடு செய்ய முன்வந்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா ஜொகனஸ்பேக்கிற்குச் சென்று தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திய அவர் தென்னாபிரிக்க அரசாங்க தொழில்துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின்பின்பே இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படும். தென்னாபிரிக்காவிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற ஆறு முக்கிய நிறுவனங்கள் முதலீடு செய்யத் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

### அன்ரன் பால...

லை பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்ததாக சிறிலங்காவின் சமாதானச் செயலகத் தலைவர் பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

### வவுனியா...

தற்கான மாவட்ட அதிகாரியை இடமாற்ற உத்தரவு வழங்கியமை, 74 தாதியரில் 34 தாதியரை இடமாற்றியமை ஆகியவற்றைக் கண்டித்தும் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த 48 மணி நேரத்தில் வேண்டுகைகள் நிறைவேற்றப்படாது போனால் அவசிய தேவைகளுக்குப் பாதிப்புஏற்படாத வகையில் தொழிற் சங்க நடவடிக்கைகளை தொடரப் போவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வவுனியாக் கிளை தெரிவித்துள்ளது.

### முகமாலையில்...

நிகழ்ந்தது என்பது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

இவரது மனைவியும், இரு பிள்ளைகளும் ஜேர்மனியில் வசிக்கின்றனர்.

### லண்டனில்...

வரும் 29ஆம் திகதி நடத்த இருந்த போதும் பாங்கொக் நகரில் துரிதமாக பரவிவரும் சார்ஸ் வைரஸ் நோய் காரணமாக உத்தேச பேச்சுக்களை நோர்வேயில் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

### சிறிலங்காவுடனான...

பிக்கையை சிறிலங்கா அரசு உறுதிப்படுத்தத் தவறியமையினால் சமாதானத்தின் மீது மக்கள் சந்தேகம் கொள்ளத்தொடங்கியுள்ளதால் உடன்படிக்கையில் ஏற்றுக் கொண்டதன் படி தீர்க்கமான தீர்வை அரசு காணத்தவறியதாலேயே எடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையானது எதிர்வரும் யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளமை குறித்து திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது நடைமுறையில் இருக்கும் சமாதான நடைமுறைகளில் காணப்படும் சில அபாயகரமான சிக்கல் தொடர்பாக எமது இயக்கத்தினால் ஆழமான அதிருப்தியும் கவனமும் வெளியிடப்பட்டு அவை சிறிலங்காவின் பிரதமராகிய தங்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என எமது தலைமையின் வேண்டுதலுக்கு அமைவாகத் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

தாங்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில் நன்கு விழிப்பாக இருக்கின்றீர்கள் என்பது எமக்குத் தெரியும்.

அதேநேரம், சமாதானப் பேச்சுக்களும் இரு முக்கிய தரப்புக்களுக்கும் இடையே ஆறு சுற்று வரை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளமையும் உண்மைதான். இருந்த போதிலும் சமாதானத்திற்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய சில வன்முறைச் சம்பவ நிகழ்வுகளால் இவை அவமதிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

போர் நிறுத்த உடன்படிக்கையின் உறுதியான நிலைப்பாட்டினையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் சுமுகமான நகர்வுகளையும் தாங்கள் நிச்சயமாக வரவேற்பீர்கள். எனவே சமாதான வழிமுறைகள் மூலம் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு இரு தரப்பினரும் உறுதியான தீர்மானமும் உண்மையான உடன்பாட்டு முடிவுமே சமாதானப் பேச்சுக்களும், போர் நிறுத்த உடன்படிக்கையும் வெற்றியடைய வழிவகுப்பனவாகும்.

உறுதியான நிலைகளுக்கு பேச்சுக்களை முன்னேற்றி நகர்த்துவதற்கும் மனப்பூர்வமான இரு தரப்பு உறவைப் பேணுவதற்கும் இரு தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையே நம்பிக்கையை கட்டி வளர்ப்பதற்கும் திறந்த வகையிலான தீர்மானங்களும் பரஸ்பர விவாதங்களுமே வழி வகுக்கின்றன. இதனை நடுநிலையாளர்களின் வழிகாட்டல்கள் வளர்க்க வேண்டும்.

சமமானதும் கூட்டு செயற்பாட்டுடனானதுமான அடிப்படை விவகாரங்களுக்கான முக்கிய உபகுழுக்கள் இப்பேச்சுக்களின் போது இரு தரப்பு பிரதிநிதிகள் குழுவிடமும் ஏற்படுத்த முடிந்திருக்கின்றது.

முன்னைய பேச்சு அமர்வுகளின் போது இனங்காணப்பட்ட தீர்மானங்களின்படி, சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து சமாதானத்துக்கான உறவுகளைப் பேணுவது என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 25 ஆம் நாள் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் மாநாட்டில் இத்தகைய கூட்டு முயற்சிகளுக்கான ஓர் எண்ணப்பாட்டு நிரல் ஏற்படுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்குப் போரினால் பாதிக்கப்பட்ட தமது மக்களுக்கு புனர்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்பவும் சர்வதேச சமூகத்தின் உதவிகளோடு ஒட்டுமொத்தமான இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும் சிறிலங்கா அரசுடன் முழுக் கூட்டுறவைப் பேண வேண்டும் என்பதில் உண்மையாகவும் அதீத விசுவாசத்துடனும் செயற்பட்டு வருகின்றார்கள். அத்தோடு கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களிலும் சிறிலங்கா அரசுடன் பரஸ்பரம் பங்கெடுத்து தமது கைகளை ஒன்றிணைத்து தயார் செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு நிற்கின்றார்கள்.

எமது நன்நடத்தையிலேது நம்பிக்கையும் இவ்வாறு சுமுகமாக இருக்க தங்கள் அரசு பொருளாதார உதவிகளுக்கான சர்வதேச சமூகத்துடனான அணுகுமுறையில் எமது அமைப்பை ஓரங்கட்டும்முகமாக புறக்கணித்துள்ளது.

எதிர்வரும் யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் மாநாட்டுக்கான தயார்படுத்தலாக இம்மாதம் 14 ஆம் நாள் வாஷிங்டனில் நடத்தப்பட்ட மிக முக்கியமான முன்னோடி கலந்துரையாடலில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் தவிர்க்கப்பட்டமையை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அத்தோடு வடக்கு - கிழக்கில் தமிழ் தேசிய இனத்தின் பொருளாதார மற்றும் சமூக நலன்களைப் பாதிக்கும் முக்கிய விவகாரங்கள் தொடர்பான விவாதங்களில் இருந்து தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளும் சமாதானத்தின் இரு முக்கிய தரப்புக்களில் ஒரு தரப்பினருமான தமிழீழ விடுதலைப்புலிகளாகிய எம்மை இந்த வாஷிங்டன் மாநாட்டில் புறக்கணித்தமையை நாம் ஆழமாக நோக்குகின்றோம்.

எமக்கிடையிலான சமாதானத்தின் நடுநிலையாளர்களான நோர்வே நடுநிலையாளர்கள் அமெரிக்க அரசு தமது நாட்டுக்குள் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் பிரதிநிதிகளை அழைப்பதில் சட்ட நிர்ப்பந்தத்தை கொண்டுள்ளதை முழுமையாக உணர்ந்துள்ளனர். எனவே அவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு மிக முக்கியமான உதவி வழங்கலுக்கான இந்த முன்னோடி மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் பங்கு கொண்டிருக்கக் கூடியதாக இப்பேர்ப்பட்ட சட்ட நிபந்தனைகள் அற்றதான ஒரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்திருக்கலாம்.

ஆனால் இந்த அசண்டையீனம் வேண்டுமென்றே செய்யப்பட்டதா? என்ற சந்தேகத்தை எமக்கு தோற்றுவித்துள்ளது.

எனவே இதனைத் தெளிவுபடுத்தும் பொறுப்பினைச் செய்வதற்கும் தங்கள் அரசு தவறியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.